-255-

006284

சுருக்கம்

நிலச்சீர்திருத்தம் – 2013–2014 –ஆம் ஆண்டு பகுதி -II திட்டம் – மாவட்ட அலுவலகங்களில் பதிவுறுக்களைப் பாதுகாப்பதற்கு – – நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [நி.சீ.1(2)] துறை

அரசாணை (நிலை) எண்.212 நாள்.21.06.2013.

படிக்கவும்:–

1. முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையரின் கடித எண்.A2/8414/2012(நி.சீ.), நாள்.3.1.2012.
2. நிதித்துறையின் 2013–2014 ஆம் ஆண்டு புதிய திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்.

--------

ஆணை:

2013–2014–ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் 27 வருவாய்த்துறைக்கான திட்டப்பட்டியலில் வரிசை எண். 30–இல் மாவட்ட அலுவலகங்களில் பதிவுறுக்களைப் பாதுகாப்பதற்கு தொடராச் செலவினமாக ரூ.57.18 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பத்தேழு இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையரின் செயற்குறிப்பிற்கு நிதிநிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

2. மேற்கூறியவாறு 2013–2014–ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் மாவட்ட அலுவலகங்களில் பதிவுறுக்களைப் பாதுகாப்பதற்கு தொடராச் செலவினமாக ரூ.57.18 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பத்தேழு இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

3475–00 – ஏனைய பொதுவான பொருளாதாரப்பணிகள் – 201 – நில உச்சவரம்பு (வேளாண்மை நிலம் நீங்கலாக) I திட்டத்தில் சேராதது – AE உட்கோட்டப்பணியாளரமைப்பு – 33 தொழில்முனை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 03 சிறப்புபணி

(த.தொ.கு: 3475–00 – 201 – AE - 3335)



Verified RealEstate™

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தை இந்த நிதியாண்டிற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும் எனவும், இப்பணிகள் முடிவுற்றதற்கான முடிவுற்ற அறிக்கையை (Completion Report) அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 137/DS (வருவாய்)/ நிதி (வருவாய்)/ 2013, நாள். 18.06.2013, இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை –5.
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு)
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18.
மாநில தலைமைக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
தலைமைக் கணக்காயர் (CAS), சென்னை–9.
நகல்
வருவாய் (வ.நி–3) துறை, சென்னை–9.
நிதி (பொ.ப./வருவாய்/வரவு செலவு II) சென்னை–9.
இருப்புகோப்பு/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Verified RealEstate™